12வது பதினெண்சித்தர் பீடாதிபதி,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள்
அருளியது

# ஓர் இந்துமத வரலாற்றுச் சுருக்கம்!



இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,
12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்.

## இந்து இலக்கியக் கழக வெளியீடு

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,118 புரட்டாசி மாதம்.

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. இவர்களையும் தெரிந்து கொள்வோம்! பதினேரு இராசிவட்டக் கருவூரார்களின் சில முக்கியக் குறிப்புக்கள்.

2. அரிச்சந்திரன் பெயர் விளக்கம்.

3. புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில் பற்றிய தவருன கட்டுரைக்கு வருத்தத் திருத்த மடல்.

4. ஞானசித்தர் மகான் பசும்பொன்ஞர் உ. முத்துராமலிங்கத் தேவர்.

5. மேல்மருவத்தூர் ஆதிபராசத்தி பற்றிய ஆய்வுக் கட்டுரை.

6. ஓர் இந்துமத வரலாற்றுச் சுருக்கம்.

## இந்து வேத தேவ விளக்கச் சிந்தனைகளில் சில...

அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் கடவுளைக் காணத் துணை செய்யும், உதவி செய்யும், ஏந்து நல்கும் எழுபத்தைந்து (75) எழுத்துக்கள் இருக்கின்றன.

அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி ஒன்றில் மட்டும்தான் '<u>மனிதனைக் கடவுளாகவே ஆக்கிடும்</u>', '<u>அருளாற்றல் ஊற்றெடுக்கும் எழுத்துக்கள்</u>' எழுபத்தைந்து (75) இருக்கின்றன.

## இவர்களையும் தெரிந்து கொள்வோம்!

# பதினேரு இராசிவட்டக் கருவூரர்களின் சில முக்கியக் குறிப்புக்கள்

### 1. அனாதிக் கருவூரர்:-

தலைமுடி கருப்பாகவும், தாடி வெண்மையாகவும், பரட்டைத் தலையுடையவரான இவர் சுமார் 306 ஆண்டுகள் வாழ்ந்தவரும்; தந்தர, தாந்தர, தாந்தரீக, மந்திறங்களை முறையாக வகுத்து 243 பருவபூசை செய்தவரும்; அழகிய நாவற்பழக் கருப்பு நிறம் கொண்டவருமாவார்.

### 2. ஆதிக் கருவூரர்:-

உடல் கருமையாகவும், இடையில் சிவப்பு கருப்பு அங்கி அணிந்தவரும்; அழகிய நீள்தாடி உடையவரும்; சுமார் 275 ஆண்டுகள் வாழ்ந்தவரும்; மாயாநிலை, ஓயாநிலை, சாயாநிலைப் பூசைகள் நடத்தியவரும் இவரே.

### 3. தொன்மதுரைக் கருவூரர்:-

பிறை சூடிய நாகன் போன்ற முடி உடையவரும்; கோபுரம் போன்ற முடியுடையவரும்; நீள்கேசங்களை உடைய தாடியை உடையவரும்; நல்ல உடற்கூறு அழகைப் பெற்றவரும்; வர்ம சாத்திற முறைகளை வகுத்தவரும்; சிறிய பாதங்களையும், ஆறடி உயரமும் உடையவரும், உடலுக்கேற்ற பருமன் உடையவரும்; ஆயிரக்கணக்கான சத்தி வேள்விகளைச் செய்தவரும்; அங்க இலக்கணம் வகுத்தவரும்; சுமார் 155 ஆண்டுகள் வாழ்ந்து திடீரென மறைந்தவரும்; அழகிய பேச்சுக்களை உடையவருமாக வாழ்ந்தவராவார்.

## 4. தென்மதுரைக் கருவூரர்:-

அழகிய பிறைச் சந்திரன் வடிவம் போல் முடியை அள்ளி முடிந்தவரும்; முதல் கடல்கோளின் போதிருந்து தென்னாட்டை ஆண்டவரும்; தென் தமிழைப் பயிற்றுவிக்கப் பெரும்பங்கு எடுத்தவரும்; செஞ்சடையன் சேகரனை வழிபட்டவரும்; இராச அம்சம் பொருந்தியவரும்; சிறிய இளந்தாடியுடையவரும்; சிவந்த மேனியுடையவரும், சில குறிகள் (*நல்லிலக்கண மார்புடையவர். இது பற்றிய விளக்கங்கள் மறையாக [இரகசியம்] காக்கப் படுகின்றன. இது போன்ற அமைப்பு உடையவரே இன்றைய நமது குருதேவர்.*) உள்ள உடல்வாகு பெற்றவரும்; ஆயகலை அறுபத்து நான்கு கலைகளை முறையாக வகுத்து தொகுத்து நடத்தியவரும்; அன்பு எனும் சமத்துவக் கொள்கை கொண்டவரும்; எதிரிகளை மிக எளிதாகப் பட்டும் படாமலும்; தொட்டும் சுட்டியும் வர்மக் கலை மூலம் அழித்து வெற்றி கொண்டவரும் இவரே.

## 5. குமரியாற்றங்கரைக் கருவூரர்:-

ஆயிரத்துக்கும் மேற்பட்ட குமரிப் பூசைகளைச் செய்தவரும்; குமரிப் பூசைகளை முறையாக வகுத்தவரும்; குமரியாற்றங்கரையில் வாழ்ந்தவரும்; கருநாகங்கள் பலவால் தீண்டப்பட்டவரும்; எளிதில் குமரியை மயக்கும் பார்வை, நடை, பேச்சு, செய்கை உடையவரும்; நல்ல சிவந்த மேனியும், அழகிய பார்வையுடைய கண்ணும், மாதர் மயங்கும் வசீகரமும், கருப்பு முடி முடிந்தவரும்; கன்னியாகுமரியையே வழிபட்டவரும்; காந்தாரம் வரை கால்நடையாகப் பயணம் செய்தவரும்; சுமார் 456 ஆண்டுக் காலம் வாழ்ந்தவரும்; கடும் செங்கோல் ஓச்சியவரும்; கந்தர்வர்களுக்குச் சத்தியைக் கொடுத்தவரும் இவரே.

## 6. பஃறுளியாற்றங்கரைக் கருவூரர்:-

பயங்கர புரட்சிமிகு மேடைப் பேச்சாளரும்; உளிபோன்ற சிறு மாணுக்கர்களே உண்டு பண்ணி பெரிய மலே போன்ற பெரிய பெரிய செயல்களேயும், சாதனேகளேயும் செய்தவரும்; பரமேசுவரன் பரமேசுவரியை வணங்கியவரும்; பல்லாண்டு காலமாக தவத்திலே ஆழ்ந்தவரும்; பாமர மக்களே அன்புடன் காத்து ஆதரித்தவரும்; பசும்பொன் மேனி நிறமுடையவரும்; விரிசடை கேசங்கள் உடையவரும்; வெண்ணிற தாடிமுடியுடையவரும்; கலிங்கம், காந்தாரம், சயாம், இருண்டகண்டம் முதலிய நாடுகளுக்குக் ககன மார்க்கமாகச் சென்று சில மருந்துகளேயும், பூசைமுறைகளேயும் அறிந்து வந்து சீடர்களே ஊக்குவித்தவரும்; 536 ஆண்டுக் காலம் மண்ணுலகில் வாழ்ந்தவரும் ஆவார்.

## 7. கபாடபுரத்துக் கருவூரர்:-

கபாலிகரோடு தொடர்பு கொண்டவரும்; கபாலிகர்களின் குருபீடமாக இருந்தவரும்; கபாலீசுவரியைத் தொழுது வணங்கியவரும்; கார்மேக நிறத்தை உடையவரும்; கார்குழல் கன்னிகளேக் கன்னி பூசை செய்தவரும்; கன்னிப் பூசையின் பூசைமுறையை மிக அழகாக வர்ணித்து வர்ணித்து முறைப்படி உண்டாக்கியவரும்; ஆயிரத்தெட்டு அண்டபிண்டங்களேச் சந்தித்து அவாவியவரும்; காற்றை விடக் கடுகிப் பயணம் செய்யக் கூடியவரும்; சுமார் 756 ஆண்டுகள் வாழ்ந்தவரும்; (*இவர் சுமார் 1000 ஆண்டுகள் இருந்ததாக ஒரு சிறு குறிப்பு உளது, ஆராய்தற்குரியது*); எங்கும் எப்போதும் ஒரே நேரத்தில் நினேத்தவுடன் செல்லும் தன்மை பெற்றவரும் ஆவார்.

## 8. தாமிரபரணியாற்றங்கரைக் கருவூரூர்:-

தலைவாழைப் பூசை செய்தவரும்; தாராபுரத்துத் தாயை வணங்கியவரும்; தாமிரத் தகட்டின் ஒளியையுடையவரும்; தாமிரபரணி ஆற்றங்கரையில் வாழ்ந்தவரும்; தந்தரம் தாந்தரம் தாந்தரீகம் மந்தரம் மாந்தரம் மாந்தரீகம் தவம் வேள்வி சித்தம் எனும் ஒன்பது தெய்வீகக் கலைகளை முறைப்படி பருவபூசை வேள்வி இவைகளில் நடத்தியவரும்; நிறைகுடம் போன்றவரும்; அமைதிக் கடல் போன்றவரும்; அளப்பரிய ஈகைக் குணமுடையவரும்; சுமார் 433 ஆண்டுகள் வாழ்ந்தவரும் ஆவார். இவர்தான் பிற்காலத்தில் கி.பி.785 முதல் கி.பி.1040 வரை வாழ்ந்த பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் கருவூரூர் அவர்களுக்கு தஞ்சைப் பெரிய கோயில் கட்டி முடிக்க அனைத்து தந்தர தாந்தர தாந்தரீகத் தகடுகளை வகுத்துக் கொடுத்ததாகப் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் தஞ்சைக் கருவூரூர் அவர்கள் கூறுகிறார்.

## 9. வைகையாற்றங்கரைக் கருவூரூர்:-

வைகை நதியிலே உதித்தவரும்; வையத்துள் வாழ்ந்தவரும்; வைகைக்கு வழிவகுத்தவரும்; இரண்டாம் கடல்கோளின் போது வாழ்ந்தவரும்; பங்குனி முழுநிலவில் நிறைந்தவரும்; முழுப் பிறவியில் எண்ணற்ற சத்திபீடப் பருவமண்டலப் பருவபூசைகள் செய்தவரும்; இளந்தாடியுடையவரும்; வைகறைப் பொழுதின் நிறத்தையுடையவரும்; 108 ஆண்டுகள் இருந்தவரும்; கூண்டோடு கைலாயம் சென்றவரும் ஆவார்.

இந்த வைகையாற்றங்கரைக் கருவூரூர்தாம் கூண்டோடு விண்ணுலகம், வானுலகம், அமரர் உலகம், உம்பர் உலகம், தேவர் உலகம், சொர்க்கம், வைகுண்டம் முதலிய பல இடங்களுக்கும்

செல்லக் கூடிய தகுதியைப் பெறுவதற்காக ஏழுபருவத்துப் பெண்களையும் சத்திகளாக அறிவித்துச் சித்திப் பூசைகளையும், முத்திப் பூசைகளையும், பருவ பூசைகளையும் செய்து கொண்டவர். எனவே, இவர் இம்மண்ணுலகின் இறுதிவரை எப்பொழுது வேண்டுமானாலும், என்ன வடிவில் வேண்டுமானாலும் தோன்றலாம். அப்படித் தோன்றி எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இருக்கலாம் என்ற பெறற்கரிய நிலைகளைப் பெற்றார்.

இவர்தான், பெண்ணின் வகைகள் பற்றியும், அங்கவியல்கள் பற்றியும், பூசைக்குரிய பெண்கள் பற்றியும், சிற்ப ஓவிய மகளிர் இலக்கணங்கள் பற்றியும், பத்தி சத்தி சித்தி முத்தி எனும் நான்கு வகைப் பூசைகளிலும் மகளிர் எப்படியெப்படிப் பயன்படுத்தப்பட வேண்டும்? எப்படி யெப்படிப் பயன்படுவர்? ஏந்தரீகத் தாந்தரீக மாந்தரீகப் பூசைகளில் பெண்களின் நிலை என்ன? கிராமதேவதை, தேவியர், சமாதுநிலைப் பெண்கள், ஆவிநிலைப் பெண்கள், பேய்நிலைப் பெண்கள், ... முதலியவர்களை யெல்லாம் எப்படிச் செயல்நிலைப் படுத்த வேண்டும்? அருள்வழங்கு நிலைக்கு உரியவர்களாக்க வேண்டும்? ... என்பன போன்ற மிகப்பெரிய நுட்பச் செயல்திட்டங்களை யெல்லாம் இவர்தான் எழுதியிருக்கிறார். எனவேதான், இவரது குருபாரம்பரியங்கள் கட்டாயமாக விந்துவழி வாரிசுகள் அன்றி மற்றவர்கள் அறியக் கூடாது என்று தடைவிதிக்கப் பட்டிருக்கிறது.

மேலும், இவர்தான் மகளிரில் ஆரம்ப நிலையிலேயே ஒதுக்கப்பட வேண்டியவர்கள், விலக்கப்பட வேண்டியவர்கள், நீக்கப்பட வேண்டியவர்கள், நீச்சமானவர்கள், உச்சமானவர்கள், நடுநிலைப் பட்டவர்கள், பயன்படாதவர்கள், அருளுலகப் பித்துக்குளிகள், அருளுலக ஏமாற்றுக் காரிகள், சாபத்திற்குள்ளானவர்கள், பாவநீக்கம் பெற முடியாதவர்கள் ... என்று பலவாறாக மகளிர்களில் பட்டியலிட்டுக்

காட்டுகிருர். அவர்களை அடையாளம் கண்டு கொள்ளுவதற்குரிய வெளிப்படையான உறுப்பிலக்கணங்களையும், அங்கவியல்களையும் பற்றி மிகத் தெளிவாக எழுதியிருக்கிருர். எனவேதான், இவருக்கும் பாரத காலக் கண்ணதேவனுக்கும் தொடர்பு படுத்திப் பல செய்திகள் பெரிய அளவில் இவருடைய அரச பாரம்பரியத்திலும், குரு பாரம்பரியத்திலும் இருக்கின்றன. இதே செய்திகள் இவருடைய இலக்கிய பாரம்பரியத்தில் இலைமறை காயாகத்தான் கூறப் பட்டிருக்கின்றன. ஆனுல், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் அரச பாரம்பரியம், குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், மற்ற இலக்கியங்கள் அனைத்திலுமே இந்த வைகையாற்றங்கரைக் கருவூருருக்கும், பாரத காலக் கண்ணதேவனுக்கும் உள்ள தொடர்புகள் பற்றிய செய்திகள் நிறைய கூறப்படுகின்றன.

## 10. அமராவதியாற்றங்கரைக் கருவூருர்:-

ஆற்றின் நீர்ப்பெருக்கிலே தோன்றியவரும்; அமராவதி வெள்ளை மாளிகையிலே வசித்தவரும்; ஆழமிகு பேச்சும், கருத்தும் கொண்டவரும்; அழகிய இராசசிம்ம நடையுடையவரும்; ஆற்றல்மிகு ஆதிபரமேசுவரியைத் தொழுதவரும்; ஆதி ஏசுவுக்குக் குருவாக இருந்தவரும்; பின் வர இருந்த ஆரியர்களை அழிக்கத் திட்டம் வகுத்து ஏட்டில் எழுதியவரும்; ஆயிரம் யானைப்பலம் கொண்டவரும்; 250 ஆண்டுக் காலம் வாழ்ந்தவரும்; விண்வெளிப் பயணம் செய்தவரும்; அமிர்தம் உண்டவரும்; ஏழுநிற வண்ணங்களை ஒரு நிறமாகக் கொண்ட வெண்ணிற மேனியை உடையவரும்; அழகு மீசையுடையவரும் ஆவார். இவர் தாடி வளர்க்கவில்லை.

## 11. காவிரியாற்றங்கரைக் கருவூரார்:-

குருபாரம்பரியத்தை எழுதியவரும்; *(குருபாரம்பரியத்தை விரிவாக எழுதினார். குருபாரம்பரியத்தை தனது மகனும், பேரனும் எழுத அனுமதி தந்தார். இதனால், இவர் மிகவும் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றார். ஏனெனில், பீடாதிபதிகள் அல்லாத மகனும் மற்றவர்களும் குருபாரம்பரியம் எழுத அனுமதி தந்தார். இவர் மூன்று பாரம்பரியங்களையும் விரிவாக [குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம்] எழுதியதோடு, குரு பாரம்பரியத்தை விரிவாக எழுதினார். ஏனெனில், தமிழர் - வடஆரியர் போராட்டத்தைப் பற்றி விரிவாக விளக்கி எழுதினார். இவர்தான் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் பதினெண்சித்தர்களுடைய சித்தர்நெறியான சீவநெறியெனும் இந்துமதத்தை* ***மெய்யான இந்துமதம்*** *என்று பெயரிட்டதையும்; பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியரின் சமசுக்கிருத மொழிக்குரிய வேதமதக் கலப்புற்ற புதிய கலப்பு மதத்தை 'பொய்யான ஹிந்துமதம்' என்று பெயரிட்டதையும் ஏராளமான பக்கங்களிலும், பல தனிநூல்களிலும் விளக்கியுரைத்து இருக்கின்றார். பொய்யான ஹிந்துமதத்தை வென்று* ***மெய்யான இந்துமதத்தை*** *எப்படி மறுமலர்ச்சியுறச் செய்ய வேண்டும் என்பதற்கான செயல்திட்டங்களையும் மிகத் தெளிவாக விளக்கி உரைத்திருக்கின்றார்)*; இருபெரும் கோயில்களை எழுப்பியவரும்; 255 ஆண்டுக் காலம் மக்களறிய வாழ்ந்தவரும்; பிற்காலச் சோழப் பேரரசை நிறுவியவரும்; வேங்கைப் புலியாக உலாவி ஆரிய ஆடுகளை விழுங்கியவரும்; சமண புத்தர்களுக்குப் பேராதரவு கொடுத்திட்டவரும்; ஆலயம், கோயில், பீடம், திருப்பதி ... முதலிய 48 வகையான வழிபாட்டு நிலையங்களை யெல்லாம் புதுப்பித்தவரும்; பதினெட்டு முறை தொடர்ந்து உலகப் பயணம் செய்தவரும்; அரிய பெரிய வித்தைகளை ஆயிரக்கணக்கில் செய்தவரும்;

அண்டம் விட்டு அண்டம் நொடியில் செல்லக் கூடியவரும்; முதலாம் இராசராசனுக்குக் குருவாக இருந்தவரும்; ஆரிய மாயையில் மயங்கிய இராசராசனைத் திருத்தப் பாடுபட்டவரும்; ஆயிரம் சூரியக் கதிர்களின் ஒளி கொண்ட கிரீடம் தாங்கியவரும்; சோழப் பேரரசின் காப்பாளரும்; இராசாக்களுக்கே உரிய பிரம்மாண்டமான மீசை வைத்திருந்தவரும்; அழகிய அன்னப் பறவை நடையினையும், பார்த்தவர் மயங்கும் தோற்றத்தையும் உடையவரும்; புரட்சிக் கருத்துக்களை உடையவரும்; 243 திருமணம் புரிந்தவரும்; வாலைப் பூசை, கன்னிப் பூசை, குமரிப் பூசை, சுடுகாட்டுப் பூசை, இடுகாட்டுப் பூசை, புதைகாட்டுப் பூசை, மாயாநிலைப் பூசை, ஓயாநிலைப் பூசை, சாயாநிலைப் பூசை முதலிய பூசைகளையும்; தந்தர தாந்தர தாந்தரீகம் இவைகளைச் செய்தவரும்; மந்தரம் மாந்தரம் மாந்தரீகம் இவைகளை வழிவகுத்துச் செய்தவரும்; புவியில் புதிரான மனிதராக வாழ்ந்தவரும் இவரே.

**//உண்மை நகல்//**

**//மூலநகல்: சித்தரடியான் சுந்தரராமன் கையெழுத்தில் இருந்திட்ட நகல்.//**

ஓம்

தலைமைப்பீடம்
1-8-89
மாலை 07:30மணி

# அரிச்சந்திரன் பெயர் விளக்கம்

## குரு பாரம்பரியம்

அருட்சந்திரன் என்ற சொல்லே அரிச்சந்திரன் எனத் திருந்தியிருக்க வேண்டும் எனக் கருத வேண்டியுள்ளது. அரச பாரம்பரியத்தில்; இளமுறியாக் கண்டத்தில் சோழ அரசர்களில் அருட்சந்திரன் என்ற பெயரில் பல மன்னர்கள் வாழ்ந்திருக்கின்றுர்கள். எனவே, அருட்சந்திரன் என்பது சோழ பரம்பரையில் பழக்கத்தில் இருந்து வரும் ஒரு சாதாரணப் பெயரே ஆகும். கங்கைக்கரைச் சோழ அரச பரம்பரையில் வந்த அருட்சந்திரன்; விசுவாமித்திரருக்கும், வசிட்டருக்கும் இடையில் மாட்டிய புராண அரிச்சந்திரன், அருட்சந்திரன் என்றே குறிக்கப் படுகின்றுன். எனவே, அருட்சந்திரன் என்ற பெயரே அரிச்சந்திரன் என்று ஆகியது என்பது தெளிவாகின்றது.

## 'சந்திரன்' விளக்கம்:

சந்திரன் = சந்து + இற்று + வந்தவன் அல்லது விழுந்தவன்.

அதாவது சூரியனில் (சந்து = இடைவெளி) சிறிய விரிசல் ஏற்பட்டது. அது சற்று பெரிதாகி சந்தாகியது. அது பின்னர் விரிசலாகியது. ஆனுலும், சூரியனின் ஈர்ப்பு விசையால் சூரியனுடன் ஒட்டிக் கொண்டிருந்தது. அந்த சந்து சற்றுப் பெரிதாகி ('சந்திரன்' சொல்லின் இறுதிப் பகுதி) ஒரு பகுதி இற்றுப் போய்க் கீழே

விழுந்ததால் உண்டானவன் என்ற பொருளில் '**<u>சந்திரன்</u>**' என்று உருவாகியது. இது பற்றி **<u>ஆதிசிவன்</u>** தனது குரு பாரம்பரியத்தில் எழுதியிருக்கின்றுர். அதாவது முதல் சங்கத்தில் இது பற்றிய விளக்கங்களே எல்லாம் சட்டப் பூர்வமாக விளக்கியுள்ளார். ஆனுல், இம் மண்ணுலகுக்குத் தேவையான தமிழ்ச் சொற்களே யெல்லாம் தென் இமயமலேயிலிருந்து உருவாகி ஓடி வந்த தென் இந்து ஆறு, தென் பிறம்மபுத்திரன், தென் கங்கை, ... முதலிய ஆறுகளிருந்த பகுதிகளில் உருவாகி இருந்த **<u>அருட்பா நகரில்</u>** அறிவிக்கப் பட்டன.

அதாவது பதினெண்சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்புக்கள், 48 வகை வழிபடுநிலேயினர்கள், ... முதலானவர்கள் கூடும் **<u>ஞானசபை</u>** ஆகிய **<u>தமிழ்ச் சங்கத்தில்</u>** இது போன்ற விளக்கங்கள் அளிக்கப் படுகின்றன. இந்த ஞானசபை கூட்டிய தமிழ்ச் சங்கம்தான் பஃறுளி ஆற்றங்கரையில் உருவான <u>தொன்மதுரை</u>யில் உருவாக்கப்பட்ட முதல் தமிழ்ச் சங்கம் ஆகும். முதல் பதினெண்சித்தர் பீடாதிபதியாகிய ஆதிசிவன் தலேமையில் கூடி இம் மண்ணுலகத் தமிழ்ப் புலவர்களுக்கிடையில் அத் தமிழ்ச் சங்கத்தில்தான் இது போன்ற அறிவிப்புக்கள் செய்யப்பட்டன.

இப்படிப்பட்ட நுட்பமான விளக்கங்கள்; அனுதிக் காலம், ஆதிக் காலம், இளமுறியாக் கண்டம், ... பற்றிய விரிவான குறிப்புக்கள் எல்லாம் முதல் பதினெண்சித்தர் பீடாதிபதியின் குரு பாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியத்திலும், அரச பாரம்பரியத்திலும் இருக்கின்றது.

அடுத்துப் பார்க்கப்பட வேண்டுமென்றுல் பதினெண்சித்தர் பீடாதிபதிகளாகத் தொடர்ந்து தோன்றி வருபவர்கள் அனுதிக் கருவூரார், ஆதிக் கருவூரார் என்ற முதல் இரண்டு பீடாதிபதிகளின் குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியங்களில்தான் மிகமிகத் தொன்மையான, பழமையான, விரிவான, இன்றைக்குத் தெரிந்து

கொள்ள வேண்டிய, இன்றுள்ள பல குழப்பங்களையும் சந்தேகங்களையும் போக்கக் கூடிய செய்திகளும், வரலாற்றுப் பூர்வமான குறிப்புக்களும் தேவையான அளவுக்கு விரிவான அளவிற்குக் கிடைக்கின்றன. எனவே, பீடாதிபதிகளாக வருகின்றவர்கள் இம் மூவருடைய பாரம்பரிய நூல்களைப் படிப்பார்கள். அதுபோல் மூன்று வகையான ஆறுவகை நூல்களையும் (கருவாக்கு, கருவாசகம், ... எனும் பதினெட்டு நூல்களையும்), பதினெண்சித்தர்களின் இலக்கியங்கள் எனப்படும் பதினெட்டு நூல்களையும் படித்திட வேண்டும்.

**குறிப்பு:-** இந்நூல் எண்ணிக்கை அடிப்படையில்தான் பதினெண் கீழ்க்கணக்கு, பதினெண் மேல்கணக்கு நூல்கள் தோன்றின.

**- தலைமைப்பீடம்.**

**//உண்மை நகல்//**

நகல் நல்குபவர்:-

தலைமைப்பீட எழுத்தர், சித்தரடியார் வேம்பை சீ.மணி

5/8/89, இரவு 10.58 மணி.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

சென்னை-11
15-3-1985

**'இந்துமதம் அழைக்கிறது' மார்ச் 1985 இதழில்**

# புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில்

**பற்றிய தவறான கட்டுரைக்கு**

**வருத்தத் திருத்த மடல்.**

அனுப்புநர்:

தலைமைப் பணியாளர்,
(இ.ம.இ., அ.வி.தி. சார்ந்த அமைப்புக்கள்)
C/O. குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரூர்,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி.

பெறுநர்:

உயர்திரு மீ.ப. சோமு அவர்கள்,
கௌரவ ஆசிரியர்,
'இந்துமதம் அழைக்கிறது' (மாத இதழ்).

**பொருள்:-** மார்ச் மாத (1985) இதழில் (பக்கம் 25 - 28) 'தஞ்சைப் புன்னைநல்லூர் ஸ்ரீமாரியம்மன்' / கௌதமன் என்ற கட்டுரையில் தவறான செய்திகள் வெளி வந்துள்ளதற்கு 'வருத்தமும் திருத்தமும்' வழங்குவது.

ஐயா,

நமது இந்துமதம் எப்போது, எப்படி, எவரால், ஏன், எதற்காக 'ஹிந்துமதம்' என்று பெயரிடப்பட்டது என்ற செய்தி முதல்;

இந்துமதம் எங்கே? எப்போது? எவரெவரால்? எதற்காகப் பிறப்பிக்கப்பட்டது என்ற வரலாறு முடிய அனைத்தையும் விளக்கமாக அறிக்கைகள், நூல்கள், ‘குருதேவர்’ என்ற மாத இதழ், இடைவிடாத சொற்பொழிவுகள், நாடெங்கும் மக்களுக்கு அருளை அநுபவப் பொருளாக வழங்க ‘அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்கள்’; இந்துமத இருட்டடிப்புக்களைப் போக்க அருளொளி பரப்பும் ஆயிரமாயிரம் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் ... மூலமாக இப் புவிப்பரப்பு முழுதும் வழங்கிப் பணிபுரியும் குருதேவர், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார். இவரது காலத்தில் இந்துமதத்தின் பெயரால் வெளிவரும் ஏடுகள் தவறான செய்திகளை வழங்குவதற்கு வருத்தமும், திருத்தமும் வழங்கக் கடமைப்பட்டுள்ளோம் யாம்.

ஏற்கனவே, உயர்திரு சுபோதயா தர்மராாசர் அவர்கள் பொறுப்பில் வெளிவந்த ‘*காதல் மோகினி*’யின் 1985 சனவரி இதழில், வடலூர் வள்ளல் பெருமான் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் இராமலிங்க அடிகளார் அவர்களை மிகமிகத் தரக்குறைவாக, அநாகரீகமாக, தமிழினமே அருளுலகில் தரைமட்டமாகும் வண்ணமாக, இந்துமதமே எள்ளி நகையாடப்படும் போக்குடையதாக ... விமரிசிக்கப்பட்ட கட்டுரை வெளி வந்தது. அது பற்றி மாபெரும் கண்டனமும், மறுப்பும் அஞ்சலாக, அச்சிட்ட அறிக்கையாக (பத்தாயிரம் [10000] அறிக்கைகள் அச்சிடப்பட்டன.) அனுப்பப்பட்டன. இன்று வரை உரிய பதில் உங்களிடமிருந்து வரவில்லை. - வருந்துகிறோம்.

இப்போது, ‘*புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலே கி.பி.1680இல் தஞ்சையை ஆண்டு வந்த வெங்கோஜி என்ற ஏகோஜி மன்னரால்தான் உருவாக்கப்பட்டது*’ என்று எழுதுகிறீர்கள்.

பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி (கி.மு.100 முதல் கி.பி.150; இவர் திருச்சி மாவட்டக் கரூர் பசுபதீசுவரர் ஆலய நிலவறையில் அருவுருவமாக நிறைந்துள்ளார்.) குருமகாசன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் அவர்கள் தமது குருபாரம்பரியத்தில் [The Religious History] மிகத் தெளிவாக,

**"... மதுரை மூதூர் எரியுண்டதால் அதன் காவல் தெய்வங்களாக இருந்த காளிதேவியார் எண்மரும் வெளிப்பட்டு உலகெல்லாம் சென்று அருட்கோட்டம் கண்டது போல்; பூம்புகாரின் அழிவால் அதன் காவல் தெய்வங்களாக இருந்த மாரி தேவியார் ஒன்பதின்மரும் வெளிப்பட்டு உலகெல்லாம் சென்று அருட்கோட்டம் கண்டனர்.**

**மீண்டும் திங்களங் குலத்துப் பாண்டியப் பேரரசு மலருவது அரிதென்பது போல் கொல்லிமலைச் செறுவாச்சியூர் மருதக்காளியும், தொட்டியம் மருதக்காளியும் அன்றிப் பிறரின் இருப்பிடம் அறிய முடியவில்லை. ஆனால், சூரிய குலத்துச் சோழப்பேரரசு மீண்டும் மலருவது இயலுமென்பது போல் சித்தர் மகள்கள் சமயபுரத்திலும், நார்த்தாமலையிலும், திருவப்பூரிலும், புன்னைநல்லூரிலும் அருட்கோட்டம் கண்டார்கள். முப்பத்தாறுண்டு மூத்தவள் சமயபுரத்திலும், பதினான்காண்டுக் கடைக்குட்டி புன்னைநல்லூரிலும் அருட்கோட்டம் கண்டது அருட்பேரரசுகளின் மலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும் உறுதுணையே..."**

என்று குறிக்கிறார்.

பதினெண்சித்தர்கள்தான் தங்களுடைய அண்டபேரண்டமாளும் இந்துமதத்தைத் தங்களின் தாய்மொழியான தமிழில் வழங்கினார்கள்.

இந்துமதத்துக்காக விண்வெளியிலிருந்து வந்த 48 வகையான வழிபடுநிலையினர், 48 வகை சித்தர்கள், 48 வகை கருவறை

மூலவர்கள், 48 வகை வழிபாடுகளுக்குரிய நாற்பத்தெட்டு வகை வழிபாட்டு .......

*[......................................... ஒரு பக்கம் மூல நகலில் இல்லை .............................]*

"அகம்பாவம் ஆணவம் ஆற்றல் அறுப்பதே இந்துமதம்"

"முற்பிறவி மறுபிறவி இப்பிறவி இணைப்பதே இந்துமதம்"

"சிந்தை நெஞ்சம் உணர்வு செப்பனிடுவதே இந்துமதம்"

... ... ... ... ... ...

எனப்படும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் **<u>கீதை வாசகங்கள் [கருவூரார்களின் கீதைகள்]</u>** இந்துமதத்தை விளக்குகின்றன.

இவ்வாற்றால், தாங்களும் தங்களைப் போன்றோரும் வடஆரிய வேதநெறி கலந்த ஹிந்துமதத்தையே பதினெண்சித்தர்களின் இந்துமதமென்று மயங்கித் தவறு செய்வதைத் தடுக்கும் முயற்சிப் பணியின் ஓர் அங்கம் துவக்கப்படுகிறது.

இந்துமதத் தந்தை, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் உலகளாவிய அமைப்புக்களால் இந்து மறுமலர்ச்சிப் பணியாற்றும் காலத்தில் வாழும் தங்களைப் போன்றோர் அன்புகூர்ந்து தவறான செய்திகளால் இந்துமதத் துரோகங்களையும், விரோதங்களையும் செய்ய வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறோம் யாம்.

குறிப்பிட்ட காலம் வரை எங்களின் நிலே இலேமறை காயாக இருக்க வேண்டும் என்பதையும் மறந்தே அடிக்கடி இதுபோல் இந்துமதச் சீரழிவுச் செயல்களேக் கண்டிக்கிறோம்.

அன்புகூர்ந்து தவருகச் செயல்பட்டுப் பாவத்தையும், சாபத்தையும் தேடிக்கொள்ள வேண்டாமென்று பணிவோடும், துணிவோடும், கனிவோடும் வேண்டிக் கொள்கிறோம் யாம்.

தலேவர் குருதேவர் அருளாணேப்படி எழுதப்பட்டிட்ட கருத்துத் திருத்த மடல்.

அன்புடன்

தலேமைப் பணியாளர்,
சோ.இரவீந்திரன்.
15/3/85.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு பெ.சௌந்தரராசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

**'குருதேவர்' 22வது அறிக்கை (1985 அக்டோபர் மாத இதழ்)**

# ஞானசித்தர் மகான் பசும்பொன்னூர் உ. முத்துராமலிங்கத் தேவர்

***[பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 78வது பிறந்தநாள் விழாவில் குவலய குருகுல பீடம், இந்துமதத் தந்தை, ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களின் அருளுலக அறிவிப்பு.]***

1) இம் மாஞாலத்தின் அருளுலகக் கருவறையாக, தொட்டிலாக, பிறப்பிடமாக, தாயகமாக என்றென்றும் விளங்கிடும் தமிழகத்தில் தோன்றிட்ட அருளாளர்களில் ஒருவரே பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள்.

2) இவர் உலகியலாக மக்களுக்கிடையில் வாழ்ந்திட்ட காரணத்தால், மக்கள் இவரை அரசியல் தலைவராக, சமுதாயத் தலைவராக, சமயத் தலைவராக, சிறந்த இலக்கிய மேதையாக, சொற்பொழிவுக் கலைஞராக, தத்துவ வித்தகராக, ... உணர்ந்தார்கள். ஆனால், இவர் பல்வேறு நிலைப்பட்ட பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள், தவசியாளர்கள், ஞானிகள், மகான்கள், சாதுக்கள், முனிவர்கள், இருடிகள், ... முதலியோரிடம் நெருக்கமான தொடர்பு கொண்டு தன்னை ஒரு சித்தராக வளர்த்திடும் அனைத்துப் பயிற்சிகளையும், முயற்சிகளையும் செய்திட்டார். இவரது தொடர் முயற்சிகள் வெற்றியாயின.

3) பதினெண்சித்தர்கள் அண்டபேரண்ட அருளாட்சிப்படி இம் மண்ணுலகின் மையமான இளமுறியாக் கண்டத்தில் 43,73,085 ஆண்டுகளுக்கு முன்னுல் தங்களின் தாய்மொழியான அமுதத் தமிழில் 'மணீசர்களே' மனிதராக்க இந்துமதத்தைத் தோற்றுவித்தார்கள். இம் மதத்தின் தலைமைப் பணியாளர்களாகத் தேவைக்கேற்ப 48 பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றிடும் திட்டத்தை வகுத்தார்கள்; எண்ணற்ற வாக்குகள், வாக்கியங்கள், வாசகங்கள், பாரம்பரியங்கள், விதிகள், மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள், சித்தங்கள், நாதங்கள், போதங்கள், ... வகுத்தார்கள்.

தோன்றிடக் கூடிய அருளாளர்களுக்கு இலக்கண இலக்கியங்கள் வகுத்து மூல ஆச்சாரியார்கள், கருவழி ஆச்சாரியார்கள், குருவழி ஆச்சாரியார்கள், பதினெண்சித்தர்கள் பீடவழி ஆச்சாரியார்கள், 48 வகைச் சித்தர்கள், 48 வகை வழிபடுநிலையினர்கள், 48 வகை வழிபடு நிலையங்கள், 48 வகை அருட்பட்டத்தார்கள், 48 வகை அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், 48 வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடுநாயகங்கள், 48 வகைத் தீர்த்தங்கரர்கள், 48 வகைப் புத்தர்கள், 48 வகைத் தேவகுமாரர்கள், 48 வகை தேவதூதர்கள் (நபிகள்), எண்ணற்ற நாயனுர்கள், ஆழ்வார்கள், அடிகளார்கள், சித்து விளையாடல்காரர்கள், குருக்கள், பூசாறிகள், ... என்று அருளுலகில் தெளிவான, முறையான, நிறையான, ... வடிவமைப்புக்களையும், வாழ்வியல்களையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்புக்களையும் உருவாக்கினுர்கள்.

4) இம் மாபெரும் செயல்சித்தாந்தங்களும், தத்துவ அடிப்படைகளும் இலைமறை காயாக வாழும் சித்த கணங்களால், சித்தாதிகளால், சித்த வித்துக்களால், ... காப்பாற்றப்பட்டே வருகின்றன. **<u>அருள்மிகு தவத்திரு, மகான் பசும்பொன்னுர் உ. முத்துராமலிங்கத்</u>**

**<u>தேவர் அவர்கள்</u>** உலகியல் கடந்து பல்வேறு நிலைகளில் தேர்ச்சியும், முதிர்ச்சியும் அடைந்து; பிறருக்கு **அருளை அநுபவப் பொருளாக வழங்கும் அருள் வள்ளலாக** உயர்ந்தார்.

இந்துமத அருளாளர்கள் இலக்கண இலக்கியப்படி அவருடைய சமாதுக்கு சித்த கணங்களும், சித்தாதிகளும், சித்த வித்துக்களும் அருளூறு நிலைகளைப் போற்றிப் பேணிக் காத்தார்கள். பூசாவிதிப்படி 18 முதல் 22 ஆண்டுகளில் சமாதுநிலைகள் முதிர்ச்சியடையும் என்பதால்; இன்றைய ஞானாச்சாரியார், குருதேவர், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், **ஞாலகுரு சித்தர் கருவூரார்**, **இந்து மதத் தந்தை** அவர்கள் பசும்பொன் சென்று அனைத்து வகையான ஐந்திறங்கள், ஐந்திரங்கள், ஐந்தரங்கள், ஐந்தீ வேட்டல்கள், முத்தீ ஓம்பல்கள், நேம நியம நிடத நிட்டைகள், சுருதி ஆரண ஆகம மீமாம்சைகள், அத்திற சாத்திற சூத்திற தோத்திற நேத்திறங்கள் ... முதலியவைகளால் குருபூசை நிகழ்த்தினர். இவற்றின் அடிப்படையிலேயே 'அருள்வள்ளல்' உ. முத்துராமலிங்கத் தேவர் பற்றிய அருள்நிலைகள் 'ஞானசித்தர்', 'மகான் பசும்பொன்னார்' என்று அறிவிக்கப் படுகின்றன.

5) இந்த அருளுலக அறிவிப்பின்படி, அவர் சமாதுநிலை முப்பத்திரண்டாவது ஆண்டிலிருந்து (1994 முதல்) அருளை மக்களுக்கு வழங்க ஆரம்பித்திடும். இதன் முயற்சியாகப் பதினாறு ஆண்டுகள் வளவளர்ச்சியும், அருட்செழிச்சியும் வலிவடைந்து நாற்பத்தெட்டாவது ஆண்டில் இச்சமாது **ஓர் ஆலயமாக** (நாற்பத்தெட்டு வகை வழிபாட்டு நிலையங்களில் ஒன்று. அமளிகை, அம்பலம், அரங்கம், ஆலயம், கந்தழி, கோயில், கோட்டம், சபை, தானம், திராவிடம்,

திருப்பதி, நியமம், பள்ளி, பாழி, கொட்டடி, வேசரம், ... என்று 48 வகைகள் உள்ளன.) உருவாகிடும். எனவே, **'பசும்பொன்னூர் ஆலயம்'** என்று இப்போதிருந்தே ஞானசித்தர் உ. முத்துராமலிங்கத் தேவரின் சமாது அழைக்கப்படல் வேண்டும்.

அவர் பிறப்பிறப்பற்ற பெருநிலை பெற்றுள்ளார்; அதனால், இனிமேல் அவருக்குச் சிலை உலோகத்திலும், கருங்கல்லிலும்தான் செய்ய வேண்டும். ஏற்கனவே உள்ள அனைத்துச் சிலைகளுக்கும் ஏந்தரீகச் சக்கரம், மாந்தரீகச் சக்கரம், தாந்தரீகச் சக்கரம், ... முதலியவற்றை முறைப்படி ஆராய்ந்து வைத்திடல் வேண்டும். பூசாவிதிப்படி அனைத்துச் சிலைகளுக்கும் பூசை செய்ய வேண்டும்.

**கருக்கள், குருக்கள், தருக்கள், திருக்கள் ஒப்புதல் பெற்ற அறிவிப்பு.**

**(ஒப்பம்) ஞாலகுரு சித்தர் கருவூரர்**

**//உண்மை நகல்//**

<u>நகல் எழுதியது</u>: அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம், அருள்மிகு அங்கயற்கண்ணி சன்னிதானம், அருள்மிகு அழகர்கோவில் மலைவாழ் தேவி இராக்காயி அம்மன் சன்னிதானம், அருள்மிகு ஆலவாய்மூதூர் தத்தனேரி சுடலைப் பத்திற காளி சன்னிதானம், சித்தர் மகன், சித்தர் பதிலி, கடவுளாச்சாரியார், சித்தரடியார் சு.இராசுநாயுடு, 130-A, மேலமாசி வீதி, மதுரை.

**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சு.இராசுநாயுடு அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

ஓம்

# <u>மேல்மருவத்தூர் ஆதிபராசத்தி பற்றிய ஆய்வுக் கட்டுரை</u>

மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசத்தி சத்தி உபாசகர் பங்காரு அடிகளார் அவர்கள் 1) அருளுரையா? 2) அறிவுரையா? 3) அருளார்ந்த அறிவுரையா? 4) அறிவார்ந்த அருளுரையா? இவை நான்கில் எதைச் சொல்லுகிறார்?

பங்காரு அடிகளார் அவர்கள் அருளாளர் என்பதை ஒப்புக் கொள்கிறோம். லாட்டரி சீட்டில் திடீர் கோடிசுவரனாக ஆனது போல் அவர் அருள் துறையில் திடீரென்று அருளைப் பெற்றார். அருளை ஏன் பெற்றார்? எப்படிப் பெற்றார்? பிறர் பெறுவதற்கு வழி சொல்ல முடியுமா? பிள்ளையைப் பெறாதவர்கள் ஆணோ, பெண்ணோ அவர்களை மலடு என்கிறோம். அதேபோல் அருள்துறையில் தனக்குச் சமமான ஓர் அருளாளரை உருவாக்க முடியாதவர்கள் மலடு என்றுதான் குறிப்பிட வேண்டும்.

பங்காரு அடிகளார் ‘ஒரே தாய்’ என்று குறிப்பிடுகிறாரே; இந்தத் தாய் இந்துமதத்திற்கு மாத்திரமா? அல்லது இசுலாம் மதத்தில் முகம்மது நபி வணங்கிய அல்லாவுக்கும் அவள்தான் தாயா? அதேபோல் கிறித்துவ மதத்தில் இயேசுநாதர் வணங்கிய தேவன், பிதா இவர்களுக்கும் அவள்தான் தாயா?

உலகில் உள்ள 800 கோடி மக்களில் ஆதிபராசத்தியை பங்காரு அடிகள் ஒருவர்தான் பெற முடிந்ததா? இது ஊழ்வினையா? விதியா? சூழ்வினையா? அல்லது எதிர்பாராமல் கிடைத்த ஒரு வாய்ப்பா?

பங்காரு அடிகளைப் போன்று இந்த ஆதிபராசத்தி மற்றவர்கள் யாரையேனும் தேர்ந்தெடுத்திருக்கிறளா? பங்காரு அடிகள் ஆதிபராசத்திக்கு முதல் மகஞ? கடைசி மகஞ?

ஆதிபராசத்தி எந்த இடத்தை, எந்தக் காலத்தைச் சார்ந்தவள்? எந்த மொழிக்கு உரியவள்? பங்காரு அடிகள் காலத்தில் இவரைப் போல் வேறு யாரும் தோற்றுவிக்கப் படுவார்களா?

மேல்மருவத்தூர் ஆதிபராசத்திதான் 'ஒரே தாய்' என்ருல் காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி, மதுரை மீஞட்சி, கன்னியாகுமரிக் கன்னி, திருநெல்வேலி காந்திமதி, திருச்சி மட்டுவார் குழலியம்மை, திருவாரூர் தியாகேசுவரி, மயிலை கபாலீசுவரி, மாரியம்மன்கள், காளியம்மன்கள், அங்காளம்மன்கள், துரோபதையம்மன்கள், பிடாரியம்மன்கள், ... இவர்கள் எல்லாம் யார்? இது பொய்யா? மெய்யா?

இந்த உலகம் ஒளிப் பிழம்பாக இருக்கும் சூரியனிலிருந்து சிதைந்து பிரிந்து வந்த ஒன்றேயாகும். இது நெருப்புக் கோளத்தில் ஒரு நூறு கோடி ஆண்டுகளும், பனிக்கோளத்தில் ஒரு நூறு கோடி ஆண்டுகளும், நீர்க்கோளத்தில் ஒரு நூறு கோடி ஆண்டுகளும், இந்நிலக் கோளம் ஒரு நூறு கோடி ஆண்டுகள் பக்குவப்பட்ட பிறகே பயிரினங்களும், உயிரினங்களும் தோன்றின. ஆங்காங்கு நீருக்குள்ளிருந்தும், நிலத்துக்குள்ளிருந்தும் உயிரணுக்கள் வெளிப் படலாயின. இந்தச் சமயத்தில்தான் பதினெண்சித்தர்கள் விண்வெளியிலிருந்து வந்து தற்காலத்தில் மனிதன் நிலவை அடைந்தது போல் பூமியை அடைந்தார்கள். அவர்கள் சுற்றிப் பார்த்து ஆண்தன்மையுள்ள அணுக்கள் வெளிப்படும் இடங்களில் சிவ ஆலயங்கள் அதாவது சீவாலயங்கள் என்று 1008 சிவாலயங்களும், பெண் தன்மையுள்ள அணுக்கள் வெளிப்படும் இடங்களில் சத்தி பீடங்கள் என்று 243 சத்தி பீடங்களும், அலித் தன்மையுள்ள அணுக்கள் வெளிப்படும் இடங்களில் திருப்பதிகள் என்று 108

திருப்பதிகளையும், இவைகள் தவிர ஒன்றரை நூறுயிரம் இடங்களில் கோயில்களையும் அமைத்தனர். எனவே, மேல்மருவத்தூரில் உள்ள ஆதிபராசத்திதான் 'ஒரே தாய்' என்றால் பதினெண்சித்தர்கள் படைத்த 1008 சிவாலயங்களும், 243 சத்தி பீடங்களும், 108 திருப்பதிகளும், ஒன்றரை நூறுயிரம் கோயில்களும் பொய்யா? மெய்யா?

'மேல்மருவத்தூரையே விளக்கமாகப் பெறு!' என்று பங்காரு அடிகளார் கூறினால் நான்கு சங்கராச்சாரியார்களையும், காஞ்சி சங்கராச்சாரியாரையும் பற்றி என்ன நினைக்கிறார்? அவர்களின் பூசைமுறைகளைப் பற்றி என்ன நினைக்கிறார்? இராமானுஞ்சாச்சாரியார், மத்வாச்சாரியார், சங்கராச்சாரியார், பூரியர், விசிட்டாத்வைதம், மாத்வம், அத்வைதம்; 63 நாயன்மார்கள், பன்னிரண்டு ஆழ்வார்கள் கூறிய பத்தி மார்க்கம்; நான்கு சந்தானக் குரவர்களும் கூறிய சைவ சித்தாந்தம்; உலகின் தோற்றம் முதல் இருந்து வரும் 48 வகையான வழிபாட்டு நிலையங்கள்; 48 வழிபடு நிலையினர், 48 அருட்பட்டங்களுக்குரிய அருளாளர்கள்; கோள்கள், இராசிகள், மீன்கள் எனும் நாற்பத்தெட்டும் உருவாக்கும் சித்து விளையாடல்காரர்கள், நாற்பத்தெட்டு வகையான சித்தர்கள்; இவர்களுக்குத் தலைவர்களான பதினெண்சித்தர்கள் (மேற்கூறிய அனைத்துக்கும் தோற்றமாக, துவக்கமாக, ஆரம்பமாக, தாயாக, கருவாக இருப்பவர்களே பதினெண்சித்தர்கள் என்பது குருபாரம்பரிய வாசகம்) ... இவைகளைப் பற்றி மேல்மருவத்தூர் ஆதிபராசத்தி என்ன சொல்லுகிறாள்? பங்காரு அடிகளார் என்ன சொல்லுகிறார்? இவைகள் எல்லாம் என்னவென்று மேல்மருவத்தூர் ஆதிபராசத்திக்கோ, பங்காரு அடிகளாருக்கோ தெரியுமா?

மேல்மருவத்தூரில் உள்ள ஆதிபராசத்தி எந்த வகையைச் சார்ந்தவள்? எந்தக் காலத்தைச் சார்ந்தவள்? அவளது தோற்றம் எத்தனை வயதைக் குறிக்கும்? கன்னியா? கண்ணியா? குமரியா? கிழவியா? சிறுபெண்ணா? இரண்டு கைகளை உடையவளா? பல

கைகளை உடையவளா? தலையில் கொம்பு உண்டா? நெற்றியில் கண் உண்டா? ஏனென்றால் பதினெண்சித்தர்கள் பராசத்தியின் வகைகளையும், வடிவங்களையும் தெளிவாக, விளக்கமாகத் தொகுத்து இருக்கிறார்கள்.

அனாதி பராசத்தி, ஆதி பராசத்தி, அனாதி சத்தி, ஆதி சத்தி, அனாதி ஈசுவரி, ஆதி ஈசுவரி, அனாதி சர்வேசுவரி, ஆதி சர்வேசுவரி, அனாதி பரமேசுவரி, ஆதி பரமேசுவரி, அனாதி மகேசுவரி, ஆதி மகேசுவரி, ... இவைகளில் மேல்மருவத்தூரில் உள்ள ஆதி பராசத்தி எந்த வகையைச் சார்ந்தவள்?

ஆதிபராசத்தி படையல் அல்லது விருப்பமான உணவு உண்ணுவது மரக்கறி உணவா? அல்லது மாமிச உணவா? (Vegetarian or Non-vegetarian?); பங்காரு அடிகளார் அவர்கள் ‘சித்தர்’ என்றால் பதினெண்சித்தர்கள், நவகோடி சித்தர்கள், நவநாதச் சித்தர்கள், அறுபத்து நான்கு ஆயகலைச் சித்தர்கள், நாற்பத்தெட்டு அருட்கலைச் சித்தர்கள், ஒன்பது கடவுட்கலைச் சித்தர்கள், ஒன்பது தெய்வீகக் கலைச் சித்தர்கள், ஒன்பது பேய்க்கலைச் சித்தர்கள், ஒன்பது நோய்க்கலைச் சித்தர்கள், ஒன்பது தேய்கலைச் சித்தர்கள், மறைச் சித்தர்கள், நெறிச் சித்தர்கள், வேதச் சித்தர்கள், யாகச் சித்தர்கள், ஓகச் சித்தர்கள், ... என்று சித்தர்களின் பட்டியல்களை தெளிவாக பதினெண்சித்தர்கள் வெளியிட்டு இருப்பதன்படி பங்காரு அடிகளார் எந்த வகைச் சித்தர்?

இவைகளை யெல்லாம் வெறுப்பினாலோ, மறுப்பினாலோ, எதிர்ப்பினாலோ, பொறாமையினாலோ, போட்டியினாலோ நாங்கள் கேட்கவில்லை. மேல்மருவத்தூர் ஆதிபராசத்தியின் பேரில் இயக்கம் வளர்ந்து வருவதால் எங்களின் ஐயங்களைப் போக்கிக் கொள்ளக் கேட்கின்றோம்.

நாங்கள் எழுதாக் கிளவிகள் (Unwritten Literature) என்று இருப்பவைகளையும், காலம் காலமாக அனுபூதி மான்களாக இருந்துவரும் பத்தர்கள், பத்தியார்கள், போத்தர்கள், போத்தியார்கள், புத்தர்கள், புத்தியார்கள், முத்தர்கள், முத்தியார்கள், சீவன்முத்தர்கள், சீவன்முத்தியார்கள், அருவசித்தியார்கள், உருவசித்தியார்கள், அருவுருவச் சித்தியார்கள் என்று பதின்மூன்று வகையான அருளாளர்கள், மகான்கள், ஞானிகள், தவசிகள், ... முதலியவர்களின் அநுபவங்களையும், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாக இருக்கின்ற இந்துமதத் தந்தை, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்களின் குருகுலக் கல்வியை அடிப்படையாகக் கொண்டு உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்காகவும், உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைவதற்காகவும் அருட்பணி விரிவாக்கத் திட்டத்தினை நிறைவேற்றி வருகிறோம். பங்காரு அடிகளார் அவர்களுடைய விளக்கங்களும், சத்திகளும் எங்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதற்காகவே இதைத் தெரிவிக்கின்றோம். ஏனென்றால் (Religion is a Science) மதம் ஒரு விஞ்ஞானமே. மதத்துறையில் பகுத்தறிவு அணுகுமுறை முழுக்க முழுக்க சிறந்த பயனைத் தரும். (Rationalistic approach in the Religious Field will give more benefits.) தெய்வீகச் சத்திகளை ஒருவருக்கொருவர் வழங்கிக் கொள்ள முடியும்.

அருளை அநுபவப் பொருளாக வழங்கித்தான் பொருளுலக இருள்களையும், இன்னல்களையும், ஏற்றத் தாழ்வுகளையும், கறைகளையும், குறைகளையும், வறுமைகளையும், வெறுமைகளையும் அகற்ற முடியும். யார் விரும்பினாலும் குருவருளால் திருவாக, இறையாக, கடவுளாக, தெய்வமாக, ஆண்டவனாக, தேவனாக, அமரனாக, வானவனாக, விண்ணவனாக, இருடியாக, ... (நாற்பத்தெட்டு வகை) மாற முடியும் என்று கூறிச் செயல்படுபவர்களே பதினெண்சித்தர்கள். இவர்கள் விந்துவழி வாரிசுகளையும், குருவழி வாரிசுகளையும் உருவாக்கிச்

செயல்படுகிறுர்கள். பங்காரு அடிகளார் ஆதிபராசத்தியின் மகன் என்பதால் எங்களே எந்தெந்த நிலேக்கு உயர்த்த முடியும்? அருளுலகில் எங்களுக்குக் கிடைக்கக் கூடிய வாரிசுரிமைகள் என்னென்ன? என்பதையும் அன்பு கூர்ந்து தெரிவிக்க வேண்டுகின்ருேம். பங்காரு அடிகளேயும் எங்கள் குருதேவரைப் போல் அருட்கொடை வள்ளலாகவே நினேக்கின்ருேம். எனவே, அவர்கள் இல்லேயென்று கூருமல் எல்லாப் பத்தி நிலேகளேயும், சத்தி நிலேகளேயும், சித்தி நிலேகளேயும், முத்தி நிலேகளேயும் அருளுவார்கள் என்று நம்புகின்ருேம்.

பங்காரு அடிகளாவது அல்லது அவருடைய பதிலியாவது, அடியான்களாவது, ஆர்வலர்களாவது அல்லது ஆதரவாளர்களாவது இவற்றிற்குரிய பதிலே அனுப்புவார்கள் என்று நம்புகின்ருேம். எப்படியும், ஒரு வாரம் அல்லது இரு வாரம் என்கின்ற எல்லேக்குள் எங்களுக்கு ஏதாவது பதில் அனுப்புவீர்கள் என்று நம்புகிருேம்.

**1) அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலேமைச் செயலாளர், வீரமாகாளி சன்னிதானம், பரமாச்சாரியார்.**

**2) அருளாட்சி நாயகம், மதுரைப் பாண்டி முனீசுவரர் சன்னிதானம்.**

**3) இந்து மறுமலர்ச்சி இயக்கம், அருட்பணி விரிவாக்கத் திட்டம் ஆகியவற்றின் தலேமைப் பொறுப்பாளர்.**

**4) அருள்மிகு கருமாரியம்மன் சன்னிதானம், தலேமைப்பீட அலுவலக இருப்பாளர்.**

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாக கும்மிடிபூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கோப்புகளிலிருந்து கிடைத்தது.//**

# **ஓர் இந்துமத வரலாற்றுச் சுருக்கம்**

1) **இந்து** = உண்மை, ஒண்மை, நன்மை, அன்பு, கனிவு, பணிவு, ... என்ற 48 வகையான பொருள்களை உடைய ஒரு சொல்.

2) **இந்துமதம்** = இம்மண்ணுலக முதல் நிலமான இளமுறியாக் கண்டத்தில் (*The Lost Lemuria - குமரிக் கண்டம்*) பதினெண்சித்தர்களால் அறுதிக் காலத்தில் 43,73,085 ஆண்டுகளுக்கு முன்னால் (1985ஆம் ஆண்டுக் கணக்கின்படி) தோற்றுவிக்கப் பட்டது.

3) **இந்துமத மொழி** = தமிழ்மொழி.

4) **இந்துமத வழிபாட்டு நிலையங்கள்** = 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

5) **இந்துமதக் காவலர்கள்** = காலப்போக்கில் தோன்றும் 48 பதினெண்சித்தர் பீடாதிபதிகள்.

6) **இந்துமதம் வளர்ப்பவர்** = 48 வகைச் சித்தர்கள், 48 வகை வழிபடுநிலையினர், 48 வகை அருளாளர்கள், 48 வகை அருட்பட்டத்தவர்கள், அருட்சத்தி பெற்றோர் 48 வகையினர் (பூசாறி, ஆசாறி, ஆச்சாரி, தேவகுமாரர், மருளாளர், ...).

7) **இந்துமத நூல்கள்** = நான்மறை, நான்முறை, நானெறி, நான்வேதம், பதினெண்சித்தம், நவநாதம், நாற்பத்தெட்டுப் போதம், தொண்ணூற்றாறு ஓதம், அத்திற சாத்திற சூத்திற தோத்திற நேத்திறம்,

நேம நியம நிடத நிட்டைகள், சுருதி ஆரண ஆகம மீமாம்சைகள், ... என்ற 48 வகைகள்.

**<u>இந்துமதப் பயன்</u>**:- தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு என்ற நான்கையும் வரையறைப் படுத்தி வடிவப் படுத்தி என்றென்றும் இவற்றில் உண்மை, நேர்மை, நன்மை, அன்பு, அமைதி, அடக்கம், மென்மை, சமாதானம், விட்டுக் கொடுத்தல், கூடி வாழ்தல், பிறருக்கு உதவுதல், ... முதலிய 48 வகையான பண்புகள் செழிக்கும் படிச் செய்வது.

## <u>உலக மக்கள் அனைவரும் இந்துக்களே!</u>

### I.

1) அனைத்து மதங்களும் இந்து மதத்தின் அங்கங்களே.
2) தமிழ்நாடே இந்துமத வீடு.
3) இந்துமத அறிவே இந்துமத ஒற்றுமை.
4) இந்துமதப் பயிற்சியே இந்துமத ஆட்சி.

### II.

1) மதமறுப்புப் போலிகளைத் திருத்த,
2) மத விரோதக் கூலிகளைத் திருத்த,
3) மத துரோகக் குருடர்களைத் திருத்த,
4) மத வெறுப்பு அப்பாவிகளைத் திருத்த,
5) இந்துத் தத்துவத்தால் ஒற்றுமை வளர்ந்திட,
6) இந்து உணர்வால் பண்பாட்டுப் புரட்சி செய்திட,

**‘குருதேவர்’ எழுதியவைகளை நாடித் தேடிப் படித்திடுங்கள்.**

## III.

1) இந்துமத விழிச்சியே இந்திய எழுச்சி.
2) இந்துமத உணர்ச்சியே இந்திய ஒற்றுமை.
3) இந்துமத வளர்ச்சியே இந்தியப் பண்பாட்டுச் செழுச்சி.
4) இந்துசமய வளர்ச்சியே இந்திய சமுதாய மறுமலர்ச்சி.
5) தமிழினத் தத்துவமே இந்துமதம்.
6) தமிழின விழிச்சியும் செழுச்சியும் இந்துமதச் செழுச்சி.
7) தமிழில்தான் இந்துமத உய்வும் உயர்வும் உள்ளது.
8) தமிழுணர்வே இந்துமதப் புத்துணர்வு.
9) தமிழரின் ஒற்றுமையே இந்துமத மறுமலர்ச்சி.
10) தமிழரின் ஆட்சியே இந்துமத மீட்சி.
11) தமிழின உரிமையே இந்துமத விடுதலை.
12) தமிழின மீட்சியே இந்துமத ஆட்சி.
13) தமிழகமே இந்துமதக் கருவறை.
14) தமிழே இந்துமத உயிர்மூச்சு.
15) தமிழ்ப் பண்பாடே இந்துமத இயக்கச் சத்தி.
16) தமிழர்களே இந்துமத நாற்றுக்கள்.
17) தமிழிலக்கியங்களே இந்துமத வித்துக்கள்.
18) தமிழினத் தாழ்ச்சிகளே இந்துமத வீழ்ச்சிகள்.
19) தமிழின ஒற்றுமையே இந்துமத வெற்றி.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கும்மிடிபூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இந்த நகல் அவரின் கோப்புக்களில் இருந்து கிடைத்தது. அழிந்திருந்த சில பகுதிகளே அச்சிட்ட குருதேவர் அறிக்கையிலிருந்து சேர்த்துச் சரிபார்க்கப் பட்டது.//**



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** இந்துமதத் தந்தையாகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார். "உலகில் தோன்றிடும் எல்லாச் சமயங்களும் சித்தர் நெறி எனும் ஆற்றின் இருமருங்கும் தோன்றும் கனிமலர்ச் சோலைகளே...." என்று குறிக்கின்றார் இவர்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



**அம்மையப்பர்**

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

**www.newsletters.gurudevar.org** **www.gurudevar.org**
**www.induism.org** ***Email:*** **indhuism@gmail.com**
www.books.gurudevar.org